# பாலியர்  நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௬ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௬ ௵ பங்குனி ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். [சங்கியை ௩.


### பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | | சி. | ௧ |
| ஒரேமுறையில் ௧0 | " | " | " | ௬ |
| ௨0 | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫0 | " | " | " | ௪0 |
| ௧00 | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

### SUBSCRIPTIONS.

| 1865. | £ | s. | d. |
|---|---|---|---|
| Mr. E, F. Cooly | | 1 | 0 |
| 1866 | | | |
| Mr. M. Saravanamuttu | | 1 | 0 |
| " J. S. Mootutamby | | 1 | 0 |
| Rev. J. Rendal | | 9 | 0 |
| " Rev W. W. Howland | | 3 | 0 |
| Mr. Henry M. Howland | | 1 | 0 |

### பங்குனிமாதம்.

மார்ச்சமாதமென்று யுத்ததேவதையாகிய மார்சின (Mars) நாமப்படி வந்தது. இம்மாதத்தில் வெட்டுவேளாண்மை முடிவு பெறுகின்றது. வேளாளரும் பிறரும் தாங்கள் பெற்ற பரிபூரணத்தால் பிதிர்களுக்கும் பிச்சுகளுக்கும் பொங்கல் பூசை வேள்விகளைசெய்து தங்கள் தேவதைகளைப் பிரியப்படுத்துகிறோமென்று எண்ணுகிறார்கள். சருவசீவ தயாபரராகிய தேவன் நமக்கீந்த நன்மைகளைக்கொண்டு அவரைக்கனம்பண்ணாமல் பிசாசுகளைக் கனம்பண்ணுவது எவ்வளவு மடமை.

இம்மாதத்தின் வெயிற்கொடுமையை உணர்த்துவதற்கு இத்தேசத்தார் பங்குனிமாதம் பகல் வழிநடந்தவன் பெரும்பாவியென்று சொல்லுவார்கள். இவ்வெயிலைத் தாங்கக்கூடாத நாம் பிசாசை வழிபட்டு நித்திய யாதனையை எப்படித் தாங்குவோமென்பதைச் சிந்திக்கவும். வெட்டுவேளாண்மை யில்லாதவர்கள் பங்குனியென்று பருப்பதுமில்லை சித்திரையென்று சிறப்பதுமில்லை என்பார்கள். ஆகையால் உங்களுக்கு உணவூட்டுகிறவர்தேவனென்று நம்புங்கள். சிலர்எங்கள் பிள்ளைகள் எங்களுக்கு உதவுவார்களென்றும், தங்கள் பணங்கள தங்களுக்குதவுமென்றும் நம்பி ஈற்றில் மோசம்போகிறார்கள். அப்படியல்ல, தேவனே ஒவ்வொரு அடைக்கலான் குருவியையும் உணவூட்டுகிறார். வேளாண்மையில்லாத எத்தனைபேர் இவ்வூரிலுண்டு. புத்தியற்ற ஐசுவரியவானுக்கு என்ன சொன்னார். இந்த இராத்திரியில் உன் ஆற்றுமா எடுத்துக்கொள்ளப்படுகில் நீ சேகரித்தவை ஆருக்கென்றார் என்பதை நினையுங்கள்.

பாக்ஸ்டர் (Baxter) என்பவர் ஒரு பள்ளிக்கூடம் கட்டும்படி சேகரித்து வைத்திருந்த ஆயிரம்பவுணையும் இளந்தபொழுது அவர் சொன்னது தேவன் நமக்குப் பொருளைத் தந்திருக்குங்காலத்தில் நாம் முயற்சியாகவும் சாக்கிரதையாகவும் செலவுபண்ணுதிருக்கில் நற்றவா விசாரிப்போம்.

### இரவற்புத்தகம்.

ஒருநாள் பெரியதம்பி தனது பெட்டியிலுள்ள புத்தகங்களைப் பார்வையிடும்பொழுது, அவைகளுக்குள் தனது சகோதரன் நல்லதம்பியென்பவன் செல்லப்பாவிடம் இரவலாக வாங்கி அதிக விருப்பத்துடன் பலமுறையும் வாசித்த ஒரு புத்தகத்தைக்கண்டு, தம்பி, செல்லப்பாவுடைய புத்தகமிங்கே இருக்கிறதென்ன? நீ அதை இன்னும் என் அவரிடத்திற் கொடுக்கவில்லையென்க, நல்லதம்பி ஐயோ! நான் மறந்தல்லோபோனேன் என்று சொன்னான். அதற்கு தமையன் அது நியாயமோ தம்பி, இரவல்வாங்கியதை மறதியினால் திரும்பக் கொடாமலிருப்பது களவென்று நீயறியமாட்டாயாவென்று சொல்ல, நல்லதம்பி, இல்லை அண்ணே, கேளாமல் எடுத்தால் அல்லவோ களவு, புத்தகத்தை அவரிடங் கேட்டுத்தானே வாங்கினேன் என்றான். அதற்குப் பெரியதம்பி நீ கேட்டுவாங்கினது சரிதான். வைத்திருக்கப் போகிறேனென்று அவருக்குச் சொல்லாமல் நெடுக அதை வைத்திருக்கிறதினால் நீயுமொரு கள்ளன் தான் என்றான். நல்லதம்பி சற்றே சினந்து, என்ன நான் ஒரு கள்ளனா? அப்படி அநியாயமாய என் சொல்லுகிறாயென்க, பெரியதம்பி, நீ அப்படி வைத்திருக்கிறதினால் கள்ளனென்றுதான் நான் நினைக்கிறேன். ஆச்சி என்னசொல்லுவாவென்று அறிய அவவிடத்திற் கேட்டுப்பார்ப்போம் வாவென்றான். தமையன் சொன்னது, சரியாய்த்தானிருக்கவேண்டுமென்று நல்லதம்பி நினைத்து உடனே அந்தப் புத்தகத்தைக்கொண்டுபோய்க் கொடுத்தான்.

பிள்ளைகளே, அநேகர் நல்லதம்பியைப்போலப் பிறரிடத்திற் பொருட்களை இரவலாகவாங்கித் திரும்பக் கொடாமலிருக்கிறார்கள். அவர்கள் என்னநோக்கமாய் அவைகளைக் கொடாமல் வைத்திருந்தாலும் அப்படிப்பட்ட செய்கை கேடானதும், இரவல் கொடுத்தவர்களுக்கு அதிக தொந்தரவையும் நட்டத்தையுமுண்டாக்குகின்றது. இச்செய்கையினால் எத்தனை புத்தகங்கள் புத்தகசாலைகளைவிட்டு அப்புறப்பட்டன. எத்தனை குப்பிகள், எத்தனை கோப்பைகள், எத்தனை மண்வெட்டி, கோடாலி, பெட்டி, கடகம் முதலியவைகள் மோசமாய்ப்போயின. ஒரு வீட்டில் ஒரு சோடான பன்னிரண்டு சிறுக் கோப்பைகளிருந்தன. இப்போ அவைகளில் ஒரேயொரு கோப்பைமாத்திரமிருக்கின்றது. மற்றப் பதினொன்றும் எங்கேபோனது, ஆரிடமிருக்கிறதென்றும் தெரியவில்லை, ஆமணக்கெண்ணெய் முதலிய சிவமருந்துடன் கொண்டுபோனார்கள். ஒருவேளை மருந்துடன் கோப்பையும் உட்சென்றுவிட்டதோ அறியோம். அரைக்கொத்து அரிசி கடன்வாங்க வருகிறவர்கள் அதைக்கொண்டு போகும்படி ஒரு பெட்டியையும் இரவல் வாங்குகிறார்கள். சொன்ன தவணையில் அரிசிவருகுது பெட்டியைக் காணவில்லை. இப்படிப்பட்ட செய்கைகள் களவினத்தினுற் செய்யப்பட்டாலும் குற்றமாகவே இருக்கின்றது. ஆதலால் இரவல்வாங்கிறவர்கள் இத்துற்பழக்கத்தினால் ஆளப்படாதபடி எச்சரிப்பாயிருப்பார்களாக. இரவல்வாங்கினதைக் கையுடன்கொடுக்க நினையுங்கள்.

### காணாத செருப்பு.

சின்னப்பு என்ற பிள்ளை தனது செருப்பைக் காணாமல் எங்குந் தேடிப் பார்த்தபின்பின் தனது பிதா சொற்களின் கருத்தைப் பார்க்கும் அகராதியை எடுத்துத் தனது செருப்பைத்தேடினான். அக்கேளையில் தாய் மகனே அதென்ன செய்கிறாயென்க எனது பிதாச் சொற்கள் காணாவிடில் அகராதியிற் பார்த்துப் பிடிக்கிறார்; அதுபோல எனது செருப்புக் காணாததால் அகராதியிற் பார்த்துப் பிடிக்கப்போகிறேன் என்று சொன்னான்.

பிள்ளைகளே, இதுபோல நீங்களும் பெலகாரியங்களைப்பற்றி மோசமாய் நினைக்கின்றீர்கள். அறிவிற்தேறினவர்களுடைய மாதிரிகளில் சிலவற்றை நீங்களும் விளங்காமல் அவரப்படிச் செய்யவில்லையா நாங்களும் அப்படிச் செய்கிறோமென்கிறீர்கள். அது காணாத செருப்பை அகராதியிற் பார்த்த கருத்துப் போலவிருக்குமென்று நினைக்குங்கள். இதுபோலவே சிலர் தேவனைப்பற்றியும் மோசவினைக்கொண்டு வெண்கலச்சற்பம், அக்கினிச் சுவாலை முதலியவைகள் தேவனைக் கருதவில்லையா என்கிறார்கள்.

### அதிகேடடைதல்.

ஒருபிள்ளை ஒருநாள் ஒரு மனுஷியிடத்தில் வந்து தாயே, இலந்தைப்பழம் தேவையாவென்க, அவள் ஆம், என்று சொல்லிப் படியையும் எடுத்துக்கொண்டு அளக்கும்படி போனாள். அவ்வேளையிற் பிள்ளை அவளுடன் கூடப்போகாமல் பின்னின்று கூட்டிலிருக்கும் இனிபெ கதையைக் கேட்டுக்கொண்டு நின்றான். அப்பொழுது அம்மனுஷி பிள்ளையை நோக்கி, நீ உள்ளாக ஏன் வரவில்லை. நான் அளப்பது சரியோவென்று என்பார்க்கவில்லை, நான் உன்னை ஏய்க்கமாட்டேனென்று எப்படி உனக்குத் தெரியுமென்றாள்.

அதற்குப்பிள்ளை நான் சற்றும் பயப்படவில்லை, நீர் அப்படிச்செய்தால் அதிகேட்டடைநீரே பெற்றுக்கொள்ளுவீரேன்றான். அதற்கு நான் அதிகேட்டைப் பெற்றுக்கொள்ளுவேனென்று நீ சொன்னதென்ன, அதை விளங்கப் பண்ணென்றாள். பிள்ளை, எனக்கு இலந்தைப்பழ நட்டமேயன்றி வேறொன்றுமில்லை. உமக்குக் களவெடுப்பதால் வருந்தோஷமுண்டு; அதினால் அதிகேட்டை அடைவீரென்றான்.

பிள்ளைகளே, ஏய்ப்பவர்கள் தாங்கள் ஆர்தமாவைக்கெடுத்த நாசத்துக்காளாகிறார்கள். ஏய்க்கப்படுபவர்களுக்குச் சொற்பபொருள் நஷ்டமேயன்றி வேறொன்றுமில்லை.

## நான் மாட்டேன்.

தம்பு என்பவன் நல்லபிள்ளை. ஆனால் அவனிடத்தில் ஒரு குற்றமுண்டு. பிள்ளைகள் மிகுதியாகக் குற்றஞ்செய்கிறவர்களென்றறிவோம். ஆகிலுந் தம்புவுடைய குற்றத்துக்கு பிள்ளைகள் மிகுதியும் உடன்பட்டவர்கள். அதாவது தம்பு விளையாடுகையில் அல்லது ஒரு வேலைசெய்ய மனமில்லாதபொழுது பெற்றோர் அல்லது ஆராகுதல் ஒருவேலைக்கு ஏவினால் நான் மாட்டேனென்று சொல்வான். இந்தத் தம்புவை அன்பாக நேசித்த மாதா அவன் எப்பொழுதும் சந்தோஷமுள்ளவனாகவிருக்கும்படி தன்னாலானமட்டும் அவனைப் பிரியப்படுத்தி நடத்துவாள். நான் செய்யமாட்டேனென்று அவன் சொல்லும் இக்குற்றத்தை முளையிற் களையவேண்டுமென்று தீர்மானித்தாள்.

ஒருநாள் தம்பு பள்ளிக்கூடத்திற்கு சீக்கிரம் போகவேண்டியிருந்ததினால் சற்று வல்லமையாகவிருந்தும் நேரத்துடன் அவனுக்கு வேண்டிய சாதங் கறிசமைக்கும்படி அடுக்களைக்குட்சென்று விளையாடிக்கொண்டிருக்குந் தம்புவைநோக்கி மகனே ஒரு கை விறகு அள்ளிக்கொண்டு வாவென்க நான் மாட்டேனென்றான். அப்பொழுது தாய் அவனை உற்றுப்பார்த்து மகனே கிட்டவா, என்றழைத்து உனக்கு என்ன வருத்தம் என்றாள். அதற்கு அவன் ஒன்றுமில்லை, ஆச்சி ஏன் இப்படிக் கேட்கிறீரென்றான். அதற்கு தாய் மகனே, நீ எனக்கு உதவிசெய்ய மனமில்லாததற்கு உன்னிடத்தில் ஒரு நியாயமிருக்கவேண்டும். ஆனாற் பார், தேவன் உன்னை என்கைக்கு ஒப்புவித்த அன்று தொடுத்து உனக்கு நான் செய்துவந்த காரியங்களுக்கு நீ என்னைமாறு செய்யக்கூடும். நான் வருத்தமுள்ளவளாகவிருக்கும்பொழுது வேலைசெய்ய என்னாற்கூடாது. அப்படியிருந்தும் என் பிள்ளை சந்தோஷமும் மனப்பாக்கியமுமுள்ளவனாகச் சாப்பிட்டுப்போகும்படிக்கே இப்படி நேரத்துடன் எழும்பி வேலைசெய்கிறேன். நான் நித்திரைபண்ணவேண்டியகாலத்தில் உனக்காகவே விழித்திருக்கிறேன். இப்படிச்செய்வது உன்னை நேசிப்பதாலன்றி வேறொன்றல்ல. நான் மாட்டேனென்று சொல்ல எனக்குமனதில்லை. உன் பசிக்குவேண்டிய போசனத்தைத் தர நான் மாட்டேனென்றால் நீ என்ன செய்வாய் என்று சொல்லத் தம்பு தன் தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு பெருங்குரலிட்டழுது இனி இப்படிச்சொல்லமாட்டேன, என் குற்றத்தைப் பொறுத்தருளும் தாயே என்றான. இப்பொழுது அவன் ஒரு பெரிய மனுஷனாய் நான் மாட்டேனென்று சொல்லும் பிள்ளைகளைக் கண்டித்து தன் சரித்திரத்தை அவர்களுக்குச் சொல்லுவான். தன் மாதாச் செய்தகண்டிப்பினால் தானுந் திருந்தி மற்றவர்களையுங் கண்டித்துவருகிற தன்மையைப் பிள்ளைகளே உற்றுப்பாருங்கள். ஐந்தாங்கட்டளையைக் கைக்கொள்வதினால் உலகத்திற்கு மிகு நன்மை பெருகும். நான் மாட்டேன் என்று சொல்லும் பிள்ளைகள் இதைக் கவனிக்கவும்.

## வாய்.

வாய்பேசவும் புசிக்கவும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் பிரயோசனமுள்ளது. அதில்லாவிடில் நாம் ஒன்றும் செய்யக்கூடாது. வாயும் மற்ற அவயவங்களைப்போலப் பாதுகாக்கப்பட வேண்டியது. சிறிதுவேளை மூஞ்சியை நீட்டி நெளித்து தங்கள் வாயைப் பழுதாக்குகிறார்கள். சிலகாலங்களில் வாய்க்குள் நிரம்பப் போசனத்தைத் திணித்துச் சுறுக்குச் சாப்பிடுவோர்கள். இவைபோலுங் காரியங்களைச் செய்ய வாய்க்கு இடங்கொடாதேயுங்கள். சிலவேளைகளில் திட்டிச் சபிக்கிறார்கள் இது சரியல்ல. இன்னும் ஒரு காரியமுண்டு; அதாவது சிரிக்கின்றது. நாய் பூனை ஆடு மாடு கோழி வாத்து முதலியவைகள் சிரிக்கிறதில்லை. ஆனால் மனுஷர் மாத்திரமே சிரிக்கிறார்கள். காலத்திற்கும் இடத்திற்கும் இணங்கச் சிரிப்பது நல்லது, பிள்ளைகள் விளையாடும்போது சிரிக்கலாம். சிரிப்புக்கடுத்த பகடிபரிகாசங்களைக் கேட்கும்பொழுது சிரிக்கலாம்.

ஆனால் ஒருவனுடைய ஆபத்திற் சிரிக்கப்படாது. ஒரு பிள்ளை தரித்திரனென்பதாலும் அவன் உடுத்திருப்பது கந்தையென்பதினாலுஞ் சிரிக்கப்படாது. ஒரு பிள்ளை தன் பாடஞ்சொல்லுகையில் அறியாமையினால் பிழைசொன்னதற்காகச் சிரிக்கப்படாது.




## சத்திய வேதபுத்தகம்.

இந்தப் படம் என்ன? ஒரு புத்தகம். என்ன புத்தகம்? சத்தியவேதபுத்தகம்? இது ஆருக்குக் கொடுக்கப்பட்டது? மனுஷருக்கு. ஏன்? அவர்கள் தங்கள் இருதயத்தைக் கெடுத்து தங்களைத்தாமே நரகத்துக்கு ஆளாக்கினதால் பாவவழியை விட்டு பரிசுத்த குணத்தை அடைந்து யேசுவின் மூலமாக தங்கள் ஆத்தும இரட்சிப்பை அடைந்து நற்கதி சேருவதற்காக தேவன் கொடுத்தார். அது நித்திய ஜீவனைக் காட்டுகின்றது. யேசுவை நமது இரட்சகரென்றறிவிக்கின்றது.

எவ்வகைப்பட்ட பதார்த்தங்களிலும் வேதம் அதி தித்திப்புள்ளதாகவிருக்கின்றது. தேனிலுந் தேன்கூண்டொழுகலிலும் மதுரமானது. அதை ருசித்தோர் உலகத்திலுள்ள எவ்வகைப் பதார்த்தங்களையும் வெறுப்பார்கள் பாவிகளுக்கு அது கசப்பாகக் காண்கின்றது. அவர்களுடைய ஜென்ம சுபாப இச்சைகளை நிறைவேற்ற இடங்கொடாததினால் அதைவெறுக்கிறார்கள்.

வானத்திற் காண்கின்ற சூரியனுடைய பிரபையிலும் அதி பிரபையுள்ளது. நமது இருதயத்திலுள்ள அந்தரங்கங்களை வான சூரியன் காண்பிக்கமாட்டாது. சத்திய வேதமென்னுஞ் சூரியனோ ஒவ்வொரு அந்தரங்கங்களையுங் காட்டும்.

நமது கையிலிருக்கிற பொன் வெள்ளிகளெல்லாம் அழிந்துபோம் இதுவோ அழியாப் பொக்கிஷம். இப் பொக்கிஷத்தைப் பெற்றவன் எப்பொழுதுஞ் சந்தோஷமுள்ளவனாவான். மரிக்கும்பொழுது தன்னுடன் கொண்டு போவான். பொன் வெள்ளியைப் பெற்றவனோ சஞ்சலமுள்ளவனாகவும் நிற்பாக்கியமுள்ளவனாகவும் வருவான். மரிக்கும்பொழுது அவைகளை அவன் கொண்டுபோவது கூடாது.

படிப்பாளிகளும் முதியோரும் இதைப் பெற்று வாசிப்பது போல மூடரும் பிள்ளைகளும் சகலரும் வாசிக்கலாம். மற்றும் மார்க்கங்களுக்குரிய புத்தகங்களை எப்பேர்ப்பட்டவர்கள் வாசிக்கலாமென்று சொல்லுகின்றன. ஆனாற் சத்தியவேதமோ சகலரும் வாசிக்கலாமென்று சொல்லுகின்றது. சிறு பிள்ளைகளும் வாசித்துத் தேவபத்தியுள்ளவர்களானார்கள். தீமோத்தேயு சிறு வயது தொடுத்து வேத வாக்குகளைப் படித்து உத்தமனாகவும் தேவபத்தியுள்ளவனாகவும் வளர்ந்து பின் ஒரு சபைக்குப் போதகனானான். ஞானிகளுக்குங் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினதற்காக ஸ்தோத்திரமென்று எங்கள் இரட்சகர் சொல்லுகிறார்.

பிள்ளைகளே, இப்படிக்கொத்ததேவவாக்கை நீங்கள் ஏன் வாசிக்க விரும்பவில்லை. அது உங்களைத் திருத்தும் உபாத்தியாராக இருக்கின்றது. அதின் விலை மகா சொற்பம். அதை முழுவதும் வாங்கத் திராணியில்லாதிருக்கில் பகுதி பகுதியாக இரண்டு மூன்று பென்சுக்கு ஒவ்வொன்றாஉங்கள் போதகர் உபதேசி [illegible]மாரிடம் வாங்கலாம். முற்காலத்தில் இதின்விலை எவ்வளவென்றறிவீர்களா? மூ[illegible] எட்வாட்டு இராசாவின் காலத்தில் முழு [illegible]த்திய வேதமும் முந்நூறு ரூபாய் விலை. அக்காலத்தில் இங்கிலாந்திலுள்ள நாட்கூலிக்காரனின் சம்பளம் மூன்றரைப்பென்ஸ். அக் கூலிக்காரன் ஒருவன் முழுவேதபுத்தகத்தையும் வாங்குவதற்கு [illegible] நான் அல்லது, [illegible] வருஷமும் [illegible] நாளும் வேலைசெய்யவேண்டும். தற்காலத்தோடு முற்காலத்தை நோக்கிப்பார்க்கையில் எவ்வளவொரு பெரிய மாறுதலுண்டுபட்டிருக்கிறது. ஒன்றரை ரூபாய்க்கு இக்காலத்தில் ஒரு வேதபுத்தகம் வாங்கலாமே. தெருவேலை செய்வோர் ஒன்பதுநாளையின் சம்பளத்தை எடுத்து ஒரு வேதபுத்தகம் வாங்கலாம். எப்படிக்கொத்த நாட்களில் ஜீவிக்கிறோமென்று பிள்ளைகளே நினையுங்கள்.

## அறிக்கையிடுதல்.

ஐரோப்பாக்கண்டத்திலுள்ள பிரபு ஒருவர் ஒருமுறை ஓர் பட்டினத்துக்குச்சென்று அங்குள்ள வைத்தியசாலையைப் பார்க்கும்படி போனார். அவர் அங்கே போனபோது அவருடைய குலத்துக்கு வரிசையாகவும் புகழ்ச்சியாகவும் அங்ககரியில் விலங்குபூண்டு, துறைமுகத்துக்குத் துறைமுகம் வள்ளங்களில் தண்டுவலித்து அல்லும்பகலுங் கடூர ஊழியஞ் செய்துகொண்டேயிருக்கும் மறியற்காரரிலொருவனை அவர் விடுதலைபண்ணிக்கொள்ளலாமென்னுஞ் செய்தி பிறந்தது. அவரோ அதைக் கேள்விப்பட்டவுடனே நன்மைசெய்யச் சமையம் வாய்த்ததென நினைத்து, சந்தோஷமும் ஆவலிப்புங்கொண்டு அம்மறியற்காரரிடஞ்சென்று அநேகரைநோக்கி, நீங்கள்படுந் தண்டனைக்குக் காரணம் யாதென வினவினார். அவர்களோ நாங்கள்படுந் தண்டனை அநியாயம் அநியாயம் என்று ஒருமித்துச் சொன்னார்கள். அந்தப் பிரபு வேறு கடைசியாக ஒருவனைப்பார்த்து, உன்காரியம் எப்படியென்று வினவினார். அவனோ உடனே தன் குற்றத்துக்காகத் துக்கித்துக் கண்ணீர்விட்டு, நானோ இந்தச் சில்லுருட்டப்பாத்திரன். நான் குற்றவாளிதான் என்றறிக்கையிட்டான். பிரபுவுமோ நான் விடுதலையாக்கவிரும்பும் மறியற்காரன் இவன்தானென்று எவருங்கேட்கச் சொன்னார்.

பிள்ளைகளே, தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் தயவைப் பெற்றுக்கொள்வதற்கு வழி தன் குற்றத்தை யுணர்ந்து சொல்லுதல்தான் என்றறிவீர்களாக.

## தற்புகழ்ச்சி.

சிலர் தங்களிலுள்ள பழுதுகளைப் பாராமல் தங்கள் முன்னோரின் புகழ்ச்சிகளையும் மேன்மைகளையும் எடுத்துப் பாராட்டி தங்களைக்கனிசமுள்ளவர்களெனக் காட்டுகிறார்கள். இது சரியல்ல என்பதற்கு ஒரு கதையினால் அத்தாட்சிப்படுத்துகிறோம்.

ஒரு மனுஷன் ஒரு கழுதையை ஓட்டிக்கொண்டு போகையிற் செவ்வையாகப் போகாததினாற் சற்றுக் கண்டிப்பாக நடத்தினான். கழுதை தன் வாலை வீசி பெருமூச்சு விட்டு சொன்னதாவது, நீர் என்னைக் கொடுமையாக நடத்துகிறீர், நான் இக்காட்களிலுள்ள மிருகமல்ல, என் பூர்வம் ஆதிதொடுத்திருக்கிறது. எல்லா மிருகங்களிலும் எனக்கு மனுஷர் முன் மிக மரியாதை செய்தவர்கள்.

அது எப்படி சொல்லென்று மனுஷன்கேட்க, நீர் வேத புத்தகத்தை வாசித்தால் அது உமக்குத் தெரியவரும். ஒரு தீர்க்கதரிசி கழுதையின்மேலேறிப் போகையில் ஒரு தேவதூதன் சமுகத்தினின்று தீர்க்கதரிசியோடு சம்பாஷித்ததல்லவா? இதுவே கழுதைகளுக்கு விசேஷித்த கனிசம். நானும் அந்தக் கழுதையின் வமிசமல்லவா! ஆகையால் என்னை மரியாதையாக நடத்தவேண்டுமென்று சொல்ல, நல்லது ஆகட்டும் கழுதையான உன்னைப் போலவே சில

மனுஷருமுண்டு. நாங்கள் இன்னவமிசம் எங்கள் மூதாதாக்கள் இராச உத்தியோகஞ் செய்தவர்கள். எங்கள் வரிசையில் சகல வரிசையையுஞ் செய்யும்படிக்கான செப்புப் பட்டயமுண்டு. எங்கள் பரவணி இன்னதல்லவாவென்று சொல்லுங் கமுறைகளுமுண்டு என்று சொல்லி வயிற்றில் ஒரு உதை உதைந்து கழுதையை ஓட்டிக்கொண்டு போனான்.

பிள்ளைகளே தற்புகழ்ச்சி தனக்கு கஷ்டம். தான் தான் நிற்கும் நிலையினின்று மேன்மைப் படுவதே யோக்கியம். தன்னைத் தானே புகழுவதல்ல பிறரால் புகழப்படுவதே மேன்மை. மேன்மைப்படுவதற்குத் தாழ்மை அவசியம். தாழ்மை உண்டாவதற்கு தன் பழுதுகளையும் தவறுகளையும் உணரவேண்டும்.

## இடையனும் அவன் ஆடும்.

ஒரு மனுஷன் ஒரு ஆட்டைக் களவெடுத்தானென்று நியாய ஸ்தலத்திற் குற்றஞ் சாற்றப்பட்டான். கள்ளனும் அந்த ஆடு தனதென்று சாட்சிவிட்டான். இடையனும் அது தனதென்று ஒப்பனைவிட்டான். ஆனால் நியாயாதிபதி ஆருடையதென்று தீர்ப்பதற்கு முட்டுப்பட்டு இடையருக்கும் ஆடுகளுக்குமுள்ள சம்பந்தமின்னதென அவர் அறிந்து ஆட்டை நியாயஸ்தலத்திற் கொண்டு வரக் கட்டளையிட்டார். ஆடு வந்தவுடன் இடையனை ஒரு அறையிற் போகும்படி சொல்லித் திருடனை ஆட்டைக் கூப்பிடும்படி சொன்னார். ஆடு அவனுடைய சத்தத்தை அறியாததினால் அவனிடத்திற் போகவில்லை. ஆனால் இடையன் அறைக்குள் நிற்பதால் ஆடு திருடனிடத்தில் ஓடிவிடுமென்று சந்தேகித்து அதின் பேரைச் சொல்லிக் கூப்பிட்டான். உடனே ஆடு அவன் சத்தத்தைக் கேட்டமாத்திரத்தில் துள்ளிக்கொண்டு அவன் நின்ற இடத்திற்கு ஓடிவிட்டது. நியாயாதிபதியும் ஆடு இடையனுடையதென்று தீர்த்தார்.

யோவான் பத்தாம் அதிகாரத்தில் இடையனையும் ஆட்டையும் பற்றி எங்கள் இரட்சகர் சொன்னவைகளைப் பிள்ளைகளே வாசித்துப்பாருங்கள். நீங்கள் கிறிஸ்துவின் ஆடுகளானால் அவர் சத்தத்தைக் கேளுங்கள். திருடனுடைய சத்தத்துக்குச் செவிகொடாதேயுங்கள்.

## நம்மைக்காக்கிறவர்.

ஆதாமின் இரட்சிப்பு அவன்கையிலிருந்தது. அவன் அதைக் காத்துக்கொள்ளக்கூடவில்லை. ஏசாவு தன் முதற்பிறப்புச் சுதந்தரத்தை தன் கைக்குள் வைத்திருந்தான். அவன் அதைக் காத்துக்கொள்ளக்கூடவில்லை. கெட்ட குமாரன் தன் உரிமையைத் தன் வசம் வைத்திருந்தான். அவன் அதைக் காத்துக்கொள்ளக்கூடவில்லை. நமது ஆத்துமாவும் நமது வசத்திலிருக்கிறது. நாமும் காத்துக்கொள்ளக்கூடவில்லை. தேவனே நிசமாக நம்பிக்கையாக நம்மைக் காக்கிறவர்.

## வைத்தியன் ஏய்க்கப்பட்டது.

ஸ்கொத்திலாந்து தேசத்தில் ஒரு தரித்திரன் தனது மனைவி துன்பமாகவிருப்பதினால் ஒரு வைத்தியனை அழைத்து ஐயா எனது மனைவியின் வியாதிக்கு மருந்து செய்யவேண்டுமென்றான். இவன் தனது பிரயாசத்திற்கும் மருந்திற்கும் செலவிறுக்கமாட்டானென ஐயுற்று பணத்தைப்பற்றி என்ன என்றார். ஐயா என் கையில் ஐந்து பவுணிருக்கிறது; கொன்றாலும் உமக்குத்தானே தருவேன் சுகப்படுத்தினாலும் உமக்குத்தானே தருவேனென்றான். வைத்தியர் மருந்துசெய்துவருகையில் அந்த மனுஷி இறந்துவிட்டான். கொஞ்சநாட் சென்றதின்மேல் வைத்தியர் ஐந்து பவுணும் எங்கேயென்று கேட்க, ஐயா நீர் எனது மனைவியைக் கொன்றீரோ சுகப்படுத்தினீரோ சொல்லுமென்க இல்லையென்றார். அப்படியானால் பணத்திற்கு உமக்கு உரித்தில்லையென்று சொல்லிப் புறங்காட்டிப் போனான். வைத்தியரும் வெட்கித் துக்கத்தோடுபோனார்.



## குருடனான பர்த்திமேயு.

மேலே நீங்கள் காண்கிற இந்தப் படம், குருடனான பர்த்திமேயு பார்வையடைந்ததைக் காட்டுகின்றது. இந்தப் படத்தின் கிழக்குப்பக்கத்தில் நிற்பவர், எங்களைப் பாவக் குருட்டாட்டத்தில் நின்று மீட்டு இரட்சிக்க வந்த யேசுக்கிறிஸ்து. அவருக்கு முன்பாக முழந்தாளில் நிற்கிற மனுஷன் பர்த்திமேயு. அவருக்குப் பின்பக்கத்தில் நிற்கிறவர்கள் யேசுக்கிறிஸ்துவினுடைய சிஷ்ப்பிள்ளைகள். ஒருநாள் யேசுரட்சகரும், அவருடைய சிஷ்ப்பிள்ளைகளும், யெரிகோவில் நின்றும் புறப்பட்டுப்போகையில், இந்தக் குருடன், வழியருகே பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். ஒருவேளை இந்தக் குருடன், நமது ஊரிலிருக்குஞ் சில ஏழைக் குருடரைப்போல, பெற்றாரை இழந்தவனாய், தன்னை ஆதரிக்கத்தக்க ஆள் உதவியற்றவனாய் இருந்தான்போலத் தெரிகிறது. ஆனால் சன்மார்க்கரால் நிறைந்ததும், நயமான சிந்தையே தங்கள் முதற் கிரீடமுமாகவிருக்கும், அமெரிக்கா, இங்கிலந்து முதலிய இடங்களிலிருக்கிறவர்களோ, இப்பேர்ப்பட்டவர்களையும், இன்னும் பலவித அங்கக் குறைவுள்ளவர்களை ஆதரிக்கிறதற்கும், படிப்பிக்கிறதற்கும், பலவிதமான வழிவகைகளை உண்டுபண்ணியிருக்கிறார்கள். இந்த ஏழைக் குருடனுக்கோ இப்படி ஒரு வழியுமில்லாதபடியினால்தான் வழியருகேயிருந்து பிச்சைகேட்டான். அவ்வேளையில் அவன் யேசுவருகிறதைக் கேள்விப்பட்டு, யேசுவே, தாவீதின் குமாரனே, என்மேலிரங்குமென்று சொல்லிச் சத்தமிட்டான். அவன் பேசாதபடி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ, தாவீதின் புத்திரனே, என்மேலிரங்குமென்று அதிகமாய் உரத்த சத்தமிட்டான். அப்போ யேசு, அவனை அழைத்துவரச் சொன்னார். அவர்கள் அவனைப் பார்த்து, திடங்கொள், எழுந்திரு அவர் உன்னை அழைக்கிறார் என்றார்கள். உடனே அவன் தன் வஸ்திரத்தைத் தள்ளி எழுந்து யேசுவினிடத்தில் வந்தான். யேசு அவனைப் பார்த்து, உனக்கு நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்க, குருடன் ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும் என்றான். யேசு அவனுடனே, நீ போ, உன் விசுவாசம் உன்னைச் சொஸ்தமாக்கிற்றென்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே யேசுவைப் பின்சென்றான்.

பிள்ளைகளே, பர்த்திமேயுவுடைய இந்தச் சரித்திரத்தினால் எங்களுக்கு நல்ல படிப்பனை. பர்த்திமேயு தன்னுடைய சரீரக் கண்களை இழந்தவனாயிருந்தான். அவைகள் பார்வையடையும்படி அவன்விரும்பி, பத்திவிசுவாசத்துடனேயும், அதிகவேண்டுமையுடனேயும், மன்றாடினான். அவ்விதமே மன்றாடி இரக்கம்பெற்றான். ஆனால், பிள்ளைகளே, உங்களில் எவ்வளவுபேருடைய மனக்கண்கள் பாவக்குருட்டாட்டம் பிடித்ததாயிருக்கின்றன. பின்னை அந்தப் பாவக்குருடர் பார்வையடையும்படி நீங்கள் என்னசெய்கிறீர்கள்? பர்த்திமேயுவுக்குப்பார்வைகொடுத்த யேசு இரட்சகர் இப்போ எங்கே. உங்களுக்கு மறைந்துபோய்விட்டாரா? நீங்கள் கூப்பிட்டாலுங் கேட்கமாட்டாரா? அவர் உங்களுடன் கூட இருக்கிறார். நீங்கள் வழிநடக்கும்போது உங்களுடன் கூடவருகிறார். நீங்கள் உங்கள் இரட்சகரைக் காணக்கூடாதபடி பாவத்தினால் உங்கள் மனக்கண்கள் குருடாக்கப்பட்டிருக்கின்றன. இதை உணர்ந்து யேசுவே தாவீதின்குமாரனே எங்களை மீட்கவந்த இரட்சகரே நாங்கள் எங்கள் பாவக்குருட்டாட்டத்தை காண்கள் அறிந்து உணரும்படிக்கும் உம்மைக் காணும்படிக்கும் எங்கள் கண்களைத் திறந்தருளுமென்று கேளுங்கள். அவர் இரக்கமுள்ளவர். குருடனான பர்த்திமேயுவுக்கு இரங்கினதுபோல உங்களுக்கும் இரங்குவார். உங்கள் மனக்கண்களைத் திறப்பார். அப்போது நீங்கள் பார்வையடைந்து இரட்சிப்பின்வழியைக் காண்பீர்கள். பிள்ளைகளே, இரட்சகர் உங்களுக்கு ரத்நம், தங்கம், கல்வி முதலிய லோக ஆஸ்திகளையல்ல, உங்கள் மனக்கண்களைத் திறந்து, இரட்சிப்பின் வழியைத் தேடத்தக்க பார்வையை அருளும்படி வேண்டுமையுடனே கேளுங்கள். அப்போது நீங்கள் பார்வையடைந்து இரட்சிக்கப்படுவீர்கள். நீங்கள் சிறுபாலகராயிருக்கிறீர்கள். வாலிபவயதிலும் வயோதிபத்திலும் தேவனைத் தேடுவதும், இரட்சிப்பை விரும்பிப் பெற்றுக்கொள்வதும் மிகவும் பஞ்சி. வாலிபவயதில் உலகசிற்றின்பமாகிய மண்ணாசை, பொன்னாசை முதலியவைகளில், மயங்கித் தியங்கி, அவைகளுள் சிக்குண்டு கிடக்குங்காலமாதலால் அந்தத் தேவனைத்தேடுதல் பஞ்சி. வயோதிபம், சரீரம் பெலவீனமடைந்து மனம் மெலிவடைந்து புலன் கலங்கியிருக்குங்காலமானதால் அப்போதுந் தேவனைத் தேடுதல் கூடாது. பாலியவயசே மனதை அடக்கிப் புலனை ஒடுக்கித் தேவனைத் தேடி இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடியகாலம். பாலியராகிய நீங்கள் இதை உணர்ந்து பார்க்கவேண்டும். பாலியவயதில் உங்கள் மனம் தேவபத்தியில் வேரூன்றியிருக்கக்கூடுமேயானால், வாலிபம் அந்தத் தேவபத்தியைப் பரிகாசம்பண்ணி அகற்றமாட்டாது. விருத்தாப்பியம், அதை வெறுத்துத்தள்ளாது. பிள்ளைகளே உங்கள் நிலைபரத்தை உணர்ந்து உங்களைத் தாழ்த்தி கர்த்தராகிய யேசுவிடம் போய் அவருடைய இரத்தத்தினால் சொன்னப்பட்ட பாவமீட்பைத் தேடுங்கள். பின்போடாதேயுங்கள். இதே தகுதியானகாலம், இதே இரட்சிப்பின்நாள் உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதிருங்கள். நீங்கள் போகிற பிரேதக்குழியில் வித்தையுமில்லை, ஞானமுமில்லை. மரணநாள்வருமுன் உங்கள் இரட்சிப்பைத் தேடுங்கள். குருடனான பர்த்திமேயுவைப்போலப் பார்வையடையும்படி கேளுங்கள்.

## பூமிசாத்திரக்கேள்வி.

௧. ஈசானக்கடலுக்கும் பார்சியன் குடாவுக்கும் ஊடே என்ன தேசம்?

௨. பார்சியன் குடாவுக்கும் கறுத்தக்கடலுக்கும் ஊடே என்ன தேசம்?

௩. பார்சியன் குடாவுக்கும் கஸ்பியன் கடலுக்கும் ஊடே என்ன தேசம்?

௪. அராபியன் கடலுக்கும் வங்காளக்குடாவுக்கும் ஊடே என்ன தேசம்?

௫. வங்காளக்குடாவுக்கும் சீனக்கடலுக்கும் ஊடே என்ன தேசம்?

௬. ஆசியாவின் வடபகுதியிலுள்ள இராச்சியம் என்ன?

௭. ஆசியாவின் நடுவிலும் கிழக்குப்பகுதியிலுமுள்ள இராச்சியம் என்ன?

௮. சீன இராச்சியத்திற்கும் கஸ்பியன் கடலுக்கும் ஊடே என்ன தேசம்?

௯. சீன இராச்சியத்திற்கும் இந்தியாவிற்கும் ஊடே என்ன தேசம்?

௰. அராபியன் கடலுக்கு வடக்கே என்ன தேசம்?

௰௧. தன்னிட்ட நாதாரிக்குத் தெற்கே என்ன தேசம்?

௰௨. யப்பான் கடலுக்குக் கிழக்கே என்ன தீவு?

௰௩. இந்தியாவுக்குத் தெற்கே என்ன தீவு?

௭௩.

"Children, can you tell me why? &c."

## சல்லாபகீதம்.

உபாத்தி.

௧. பிள்ளை, சொல்லக்கூடுமோ?
மீட்க யேசு வந்தாரோ?
பிள்ளை.
ஆம்,—என் மீட்சிக்காகவே
யேசு சீவன் விட்டாரே.

உபாத்தி.

௨. பதில் செய்ய என்னவோ?
கடன் உண்டு,—அல்லவோ?
பிள்ளை.
ஆம்,—என் நெஞ்சைப் படைப்பேன்,
தொண்டு செய்ய ஆவிப்பேன்.

உபாத்தி.

௩. யேசுவில் நம்பிக்கையோர்?
மோட்சஞ் சேரலாருமோ?
பிள்ளை.
ஆம்,—எம் மீட்பர் அவரே,
ரட்சை செய்வார். அது மெய்.

உபாத்தி.

௪. நெஞ்சிச் சேர் இப்பொழுதே.
பிள்ளை.
வேண்டுகிறேன், என் யேசுவே.
எல்லாரும்.
நாங்கள் யாரும் வேண்டுவோம்,
உம்மை என்றுஞ் சேவிப்போம்.

## சத்தியவேதக்கேள்வி.

௨ம் பாடம்.

இடையரும் தூதரும். லூக் ௨: ௮—௰௫, ௨௰.

௧. யேசு எவ்விடத்திற் பிறந்தார்?
௨. இடையருக்குக் காணப்பட்டதார்?
௩. தேவதூதன் ஆர்?
௪. கர்த்தருடைய மகிமையாவதென்ன?
௫. இடையருக்குத் தூதன் சொன்னதென்ன?
௬. இடையருக்கு அறிவித்த சுவிசேஷம் என்ன?
௭. தாவீதின் ஊர் என்பது எது? பெத்லகேம்.
௮. இரட்சகர் என்ற வார்த்தைக்கும் கிறிஸ்து என்ற வார்த்தைக்குங் கருத்தென்ன?
௯. தூதனுடன் வேறூர் கூடினது?
௰. பரமசேனை என்பது என்ன? தூதர்.
௰௧. அவர்கள் என்னசெய்தார்கள்?
௰௨. ஏன் தேவனை ஸ்தோத்திரித்தார்கள்?
௰௩. அவர்கள ஸ்தோத்திரித்த வசனம் என்ன?
௰௪. தேவதூதன் சொல்லியபடி பிள்ளையை இடையர் கண்டார்களோ?
௰௫. அவர்கள் பிள்ளையைக் கண்டபின் என்னசெய்தார்கள்?

## கொக்கு.

துரோக சிந்தையுள்ள ஒரு கொக்கானது ஒரு குளக்கரையில் உட்கார்ந்துகொண்டு அக்குளத்தில் துள்ளுகிற மீன்களைப்பார்த்து இவைகளை எப்படியாவது மோசஞ்செய்து நம்முடைய ஸ்தானத்திற் கொண்டுபோய்ச் சேர்த்துக்கொள்வோமேயானால் நமக்கு நாளைக்கு ஆகாரத்திற்குக் குறைவில்லையென்று தனக்குள்ளேயெண்ணி, ஐயோ! மீன்களே இப்பொழுது துள்ளிவிளையாடுகிறீர்களே, நாளையிக்கோரம் செம்படவன் வந்து வலையெறிந்து உங்களைப் பிடிக்கஇருக்கிறானே, அப்பொழுது நீங்கள் எல்லோரும் ஒருமிக்க மாண்டுபோவீர்களே, ஆதலால் சீக்கிரத்தில் வேறோர் இடத்தைத்தேடிக் கொள்வீர்களேயாகில் பிழைத்துப்போவீர்களென்றது. இதைக்கேட்டு மீன்களெல்லாம் கொக்கைப்பார்த்து, ஓய்! வேகாருணியா, எங்களுக்கு நிலத்தில்நடக்கும் சக்தியில்லாமையால் தயைசெய்து வேறோர்குளத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டு என்று பிரார்த்திக்க, கொக்கானது நமக்கு ஆகாரம் வலிய வருகிறதென்று தனக்குள் மகிழ்ந்து மீன்களை நடைக்கொவ்வொன்றாகத் தன் மூக்கினால் கவ்விக்கொண்டு போய்த் தன்னிருப்பிடத்திற் சேர்த்துக்கொண்டு சிலவற்றைத் தின்று மற்றவற்றை உலரவைத்துப்போட்டு மீண்டும் அக்குளக்கரையில் வந்து உட்கார்ந்தது. அப்பொழுது அதிலிருக்கும் நண்டானது கொக்கண்டைவந்து நான்மாத்திரந்தானே பாவி, என்னையுங் கொண்டுபோய் மீன்களைக் காப்பாற்றினதுபோலக் காப்பாற்றல் ஆகாதோவென்று வேண்டிக்கொண்டது. கொக்கு நல்லதென்று அதையுங் கவ்விக்கொண்டு பறந்துபோகையில், வழிகளில் சிந்திக்கிடக்கும் மீன் முட்களைக் கண்டு, ஐயோ! நம்மையுங் கொல்லவல்லவோ கொண்டுபோகிறதென்று அறிந்து உடனே அக்கொக்கின் கழுத்தைத்தன் கொடுக்கால் இரண்டுதுண்டாகக் கத்தரித்துப் போட்டு அங்கிருந்த ஒரு குட்டையில் விழுந்து பிழைத்துப்போய்விட்டது. அவதந்தரம் தனக்கந்தரமாதலால் பிறர்க்குக் கேடுநினைப்பார் தானே கெடுவார்களென்பது இதனால் விளங்காமற்போகாது.

இப்படிக்கு,
தில்லையம்பலம் முத்தத்தம்பி.
சாவகச்சேரி ௲அசுக௯வுஷ தைமீ ௨௰ வ.

## காணாத சாட்சி.

நாழிகைவட்டம் சூரியன்செல்லும் மணித்தியாலத்தைக் காட்டுவதுபோல வண்டி அல்லது இரதம் எவ்வளவுதூரஞ் சென்றதென்பதைக்காட்டும் ஒரு இயந்திரமுண்டு. அந்த இயந்திரம் சில வாடகை வண்டிகளில் வைக்கப்பட்டிருக்கும். வாடகைக்கு வண்டிவிடுவோர் எவ்வளவுதூரம் வண்டி சென்றதென்று பார்த்துத் தங்கள் வாடகைகளை வாங்குவார்கள்.

இரண்டு வாலிபர் பத்துமைல்தூரம் போகிறதென்று சொல்லி, ஒரு வண்டியை வாடகைக்குப் பிடித்தார்கள். அதில் இந்த இயந்திரமிருக்கிறதென்று அவர்களுக்குத் தெரியாது. முன் சொல்லிய பத்துமைல்தூரத்திலுள்ள ஒரு கிராமத்திற்குப் போகிறதென்று சொல்லி அந்தக் கிராமத்திற்குப் போகாமல் ௰௫ மைல் தூரமுள்ள பின்னொரு கிராமத்திற்குப்போய்த் திரும்பிவந்தார்கள். அவர்கள் திரும்பிவந்தவுடன் வண்டிகளுக்கு முதலாளி அவர்களிடத்தில் ஒன்றும் விசாரியாமல் வண்டியிலிசைத்திருந்த இயந்திரத்தைப்பார்த்து அவர்கள் சென்றதூரம் எவ்வளவென்று கண்டான். அதின்பின் அவர்களை நோக்கி, நீங்கள் எங்கே போனீர்களென்று கேட்க, அவர்கள் நாங்கள் உமக்கு முன் சொல்லிய இடத்திற்கே போனோமென்றார்கள். அதற்கு அப்பால் நீங்கள் போகவில்லையாவென்க, இல்லையென்றார்கள். நீங்கள்போய்த் திரும்பிவர எத்தனைமைல் என்ற கேட்க, இருபது மைல் என்றார்கள். அப்பொழுது இயந்திரத்தின் வில்லை இழுத்து அதைத் திறந்துகாட்டினபொழுது முப்பதுமைல் எனக்கண்டு, தங்களில் வெட்கி நாணி எங்களைக் காணாத இயந்திரம் எங்கள் செய்கையைக் குறித்துச் சாட்சியிட்டதென்று ஆச்சரியப்பட்டார்கள்.

இவ்வண்ணமே தேவனும் நமது இருதயத்தில் நடக்குங் காரியங்களைக் குறிக்கும்படி ஒரு இயந்திரத்தை வைத்திருக்கிறார். நாம் செல்லுமிடமெல்லாம் அந்த இயந்திரமுங் கூடவந்து எங்கள் செய்கைகளைக் குறிக்கின்றது. நாம் அவ்வியந்திரத்தைப்பற்றிச் சிந்தனையற்றவர்களாயிருக்கையில் நமது செய்கை வாக்கு எண்ணம் என்பவைகளை அதுகுறிக்கின்றது. நாங்கள் சிலகாலத்தில் எங்கள் சிநேகிதரை ஏய்க்கப்பார்க்கிறோம். ஆகிலும் சத்தியம் நமது இருதயத்திற் பதிந்திருக்கிறது. தேவன் கடைசியில் இயந்திரத்தின் வில்லை இழுப்பார். அப்பொழுது அதில் வரைந்திருப்பதெல்லாம் வெளியாகும்.

இந்தச் சாட்சியை நாம் ஒப்புக்கொள்ளக் கூடாதென்று சொல்ல இடமில்லை. அது எங்கள் சீவசாட்சியே. எங்கள் உதடு எதை மறந்தாலும் எங்கள் சீவசாட்சி ஒன்றையும் மறக்கமாட்டாது. அதிற் சகலமும் வரையப்பட்டிருக்கிறது. தேவன் நியாயத்தீர்ப்பையில் எங்கள் வாய் அப்படி ஒன்றுஞ் செய்யவில்லையென்று சொன்னாலும் சீவசாட்சி வாயுடன் இணங்கிச் சாட்சியிடாது. வாசிக்கிறவனே, உன்னோடு இசைக்கப்பட்டிருக்கும் இயந்திரத்தைப் பற்றிச் சிந்தி. அதிற் சகலமும் வரையப்படுகிறதென அறி.

## பிள்ளைகளை எப்படி வளர்த்தல்.

"அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும் அதை எப்படி நடத்தவேண்டும்" என்பது சத்தியவேதத்திலுள்ள ஒரு கேள்வி. பெற்றோரே, நீங்களும் மனோவாவைப்போற் கேட்கிறீர்களா? உங்கள் அந்தரங்கப் பிரார்த்தனைகளில் உங்கள் யெகோவாவிடம் வினவுங்கள். அவர் உங்களுக்குப் போதிப்பார். பிள்ளைகளை வளர்ப்பதைப்பற்றிச் சில ஒழுங்கை எழுதுகிறோம். அதைப் பெற்றோர் கவனிக்கக் கேட்கிறோம்.

௧. ஒரு பிள்ளை பிறந்ததென்று சொல்லக்கேட்டவுடன் அழியாமையுள்ள வஸ்து தோன்றினதென்று சிந்தியுங்கள்.

௨. அன்னாள் சாமுவேலைத் தேவனுக்கென்று நேர்ந்ததுபோல அந்தப் பிள்ளையையும் தேவனுக்கென்று நேருங்கள்.

௩. பிள்ளைக்காகப் பிரார்த்தியுங்கள்; பிள்ளைக்குப் பிரார்த்தனையைப் போதியுங்கள்.

௪. தேவ வாக்குகளினாற் பிள்ளையின் மனதை நிரப்புங்கள்.

௫. கிறிஸ்தவர்களென்ற உங்கள் நடையாற் காட்டுங்கள்.

௬. கீழ்ப்படிதல், ஒழுங்கு, தயாளம், முயற்சி, ஒறுப்பு என்பவைகள் பிள்ளைகளுக்கு அவசியமெனப் பயிற்றுங்கள்.

௭. முதல் அரும்புந் தீமையைக் கொல்லுங்கள். நல்லுணர்ச்சிகளைப் பயிற்றுங்கள்.

௮. பிள்ளையின் இருதயம் கிறிஸ்துவுக்கு ஒப்படைக்கப்படுமட்டும் ஆறியிராதேயுங்கள்.

## கடித உத்தரம்.

நமது சிநேகிதரொருவர் பாலியர்நேசனைப் பற்றிச் சில குறிப்புகளை வரைந்தனுப்பினார். அவர் தமது நாமத்தை வெளிப்படையாக அறிவியாமல் மறைந்து நிற்பதால் இப்பத்திரவழியாக அவருக்கு உபகாரஞ்சொல்லுகிறோம். அவர் பண்ணிய எல்லாக் குறிப்புகளையும் நாம் ஒப்புக்கொள்ளாதிருந்தும் சிலவற்றிற்கு நாம் நன்றியறிதலான துதியைக் கூறுகிறோம். பத்திரத்தை உண்டாக்குவோர் படும்பாடுகளை அவர்களேயன்றிப் பின்னொருவரும் அறியார்கள். எல்லாருக்குந் திருத்தியாகப் பத்திரமுண்டாக்குவது கூடாது. ஒருவர் விரும்புவது பின்னொருவருக்கு வெறுப்பு. "குற்றமே தெரிவார் குறுமாமுனி சொற்ற பாவிலும் ஓர் குறை சொல்லுவார்." ஆகையால் நாம் தைரியவீனப்படோம். இடைக்கிடை இப்படிப்பட்ட குறிப்புகளை எழுதுவதுமாத்திரமல்ல இப்பத்திரம் நடைபெறும்படிக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து நற்காரியங்களையும் உபயோகமானவைகளையும் அவர் எழுதுவாரென்று காத்திருக்கிறோம். இவ்விதமாக நமக்கு உதவிசெய்வதுவே முதற்கடமையென்றுணர்வாராக.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.